
திருமலை திருப்பதி தேவஸ்தானம்
பால ஸப்தகிரி
சமய மாத இதழ்
ஆகஸ்ட் 2020
ஸப்தகிரி இலவச இணைப்பு
ஸ்ரீவாமன ஜெயந்தி
29-08-2020




பிரம்மோத்ஸவத்தில் அன்னமய்யா வேடத்தில் சிறார்





பிரம்மோத்ஸவத்தில் சிறார்களின் நாட்டிய நிகழ்ச்சி

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி



ஸப்தகிரி இலவச இணைப்பு

ஆகஸ்ட் 2020

மலர்–01 இதழ்–06

உள்ளுறை பக்கம்

இந்துக்கடவுள்கள் : கண்ணன் அவதார அற்புதங்கள் 04
- திரு. வீ. சீனிவாசன், இறவாங்குடி.

பன்னிரு ஆழ்வார்கள் : நம்மாழ்வார் மோட்சம் 06
- ஸ்ரீரங்கராஜ ராமாநுஜதாசர், சேலம்.

கன்னட ஹரிதாஸர்கள் : ஸ்ரீகனகதாஸர் 08
- திருமதி பா. காயத்ரி, கேரளா.

சித்திரக்கதை : குமாரதாரை தீர்த்தம் 10
கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்.
சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்.

நீதிக்கதைகள் : கெடுவான் கேடு நினைப்பான் 14
- திரு. சத்யதாரா, சென்னை.

சிறந்த சிறுமி : செல்வி சர்மிதா சிம்மா 16

புதிர் : வினா–விடை 17
- செல்வி வெ. அனகா, திருவாரூர்.

சித்திரம் வரைதல் 18

முன்னட்டை : ஸ்ரீவாமனர்
பின்னட்டை : ஸ்ரீ பாலகிருஷ்ணர், சித்திரம்.



இந்துக்கடவுள்கள்

# கண்ணன் அவதார அற்புதங்கள்

– திரு. வீ. சீனிவாசன்,
இறவாங்குடி.

இவ்வுலகில் திருமால் எடுத்த அவதாரங்கள், மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், எடுக்க வேண்டிய அவதாரம் கல்கி. இந்த அவதாரங்களில் கண்ணன் அவதாரம் பற்றிக் காண்போம்.

**கண்ணன் பிறப்பு :**

வடமதுரைச் சிறையிலே ஆவணி மாத ரோகிணி நட்சத்திர தேய்பிறையில் அஷ்டமி திதியில் சந்திரன் தோன்றும் வேளையில் கிருஷ்ணனாய் அவதாரம் செய்தார். குழந்தையாய் வசுதேவன் கையில் ஏறிச் சென்றார். காளிக்கு அரியபதம் அளித்தார்.

**கருணை வள்ளல் :**

பாலகிருஷ்ணன் திருக்கையால் நிறைய அரிசியை அள்ளி வந்து நாவல் பழக்காரிக்கு கொடுத்து பழம் வாங்க விரும்பினார். ஆனால், அவர் நடந்து வரும் போது மோதிரத்தின் வழியே அரிசி எல்லாம் சிந்தி விட்டது. இரண்டு மூன்று அரிசி மட்டுமே கையில் ஒட்டியிருந்ததைக் கண்ட பழக்காரி, அவர் கையைப் பிடித்து இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்து, கைநிறைய நாவல் பழங்களை கொடுத்தாள். சிந்திய அரிசியைத் தன் கூடையில் இட்டுக் கொண்டாள். அப்போது அவள் கூடை நிறைய பொற்காசுகள் நிறைந்து இருந்தது. இதைக்கண்டு பயந்து போன பழக்காரி



நந்தகோபனிடம் முறையிடவும், அவர் அவை எல்லாம் உன் சொத்தாகும். நீயே கொண்டு போ என்று கூறி விட்டார். இப்படி ஏழைக்கு இரங்கும் கருணை வள்ளல் தான் கண்ணன்.

## குபேரனின் மக்கள் சாபம் தீர்த்தவர் :

குபேரனின் மக்களாகிய நளகூபன், மணிக் கிர்வன் என்ற இருவரும் நீர்நிலையில் ஆடையின்றி நீராட முனிவர்கள் இதைக் கண்டு கோபமுற்று மருதமரங்களாகப் போகும்படி சபித்தார்கள். கண்ணன் குழந்தையாய் இருந்த போது வெண்ணெய் அடிக்கடி உண்டதால் அவன் தாய் யசோதை அவனை கயிற்றால் உரலோடு சேர்த்துக் கட்டினாள். அப்போது கண்ணன் பயப்படமால் தவழ்ந்து சென்று சக்கரமாகிய விரலாலும் உரலாலும் அந்த மருத மரங்களை அறுத்து வீழ்த்தினான். அவர்கள் சாபத்தைப் போக்கி பழைய படி வாழும்மாறு செய்தான்.

## நட்பின் இலக்கணம் கண்ணன் :

குசேலன் என்னும் அந்தணன் கண்ணனுடன் குருகுலக் கல்வி பயின்றவன். வருமை காரணமாக சுசீலை என்னும் அவர் மனைவி அவரை கண்ண னிடம் பொருள் பெற்று வர அனுப்பி வைத்தார். நண்பன் வந்தான் என்று தான் வரவேற்று, தனக்கு என்ன கொண்டு வந்தாய் கொடுங்கள் என்று கேட்டு, அவர் மடியிலிருந்த அவலை வாங்கி இருமுறை உண்டு அக்குசேல னின் துன்பம் நீங்கச் செல்வமும் முடிவில் பரமபதமும் கருணை யுடன் அவருக்கு அளித்தான்.





பன்னிரு ஆழ்வார்கள்

# நம்மாழ்வார் மோட்சம்

– ஸ்ரீரங்கராஜ ராமாநுஜ தாசர்,
சேலம்.

பாலகன் கோபி அவனது அக்கா வைஷ்ணவி இருவரும் அவர்களது தாத்தா பாட்டியுடன் வைகுண்ட ஏகாதசி இராப்பத்து கடைசிநாள் ஸ்ரீரங்கம் சென்று வந்தார்கள். அன்று இரவு நம்மாழ்வார் மோட்சம் இறுதி நாள் வைபவமாக கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிகளை முழுவதும் பார்த்து படுத்துறங்கிய சிறுவனுக்கு கனவில் பல சந்தேகங்கள் தோன்றின. ஸ்ரீரங்கர் நம்பெருமாள் உற்சவராக வைர அலங்காரத்தில் சிரித்தபடி கோபியை பார்த்து பேசுகிறார்.

**நம்பெருமாள் :** "கோபி! என்ன ஆழ்ந்த சிந்தனை! என்னிடம் கூறு" என்கிறார். கோபிக்கு தான் பார்ப்பது, கேட்பது கனவா நினைவா என புரியாமல் பெருமாளிடம் தனது சந்தேகங்களைக் கேட்க ஆரம்பித்தான்.

**கோபி :** பெருமாளே! மற்ற ஆழ்வார்களுக்கும், நம்மாழ்வாருக்கும் மோட்சம் அடைந்ததில் என்ன வித்தியாசம்?

**நம்பெருமாள் :** நம்மாழ்வாருக்கு முன்பாக துவாபர யுகத்தில் அவதரித்த முதலாழ்வார்களும், திருமழிசை ஆழ்வாரும் என்னால் மோட்சம் அடைந்தார்கள். ஆனால் கலியுகத்தில் யாருக்கும் வைகுண்ட பிராப்தம் கிடையாது என கருதி ஜெயவிஜயரால் வைகுண்ட வாசல் மூடப்பட்டது. கலியுகத்தில் பிறந்த நம்மாழ்வாருக்கு நான் வைகுண்ட பிராப்தம் அளித்தாலும், கலியுகத்தில் பிறந்த அனைவருக்

கும் வைகுண்ட பிராப்தம் அருள கேட்டுக் கொண்டார். அவ்வாறே வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு பத்து நாட்களும் சொர்க்கவாசல் திறந்து வைக்கப்படுகின்றது என்றார்.

**கோபி :** பெருமாளே! அப்படியெனில் கோயிலில் வைகுண்ட வாசல் நுழைந்து வரும் அனைத்து பக்தர்களுக்கும் வைகுண்ட பிராப்தம் கிடைக்குமா? என்றான்.

**நம்பெருமாள் :** இதற்கு பதில் "சுவாமி நம்மாழ்வாரே கூறுவார்" என்றார். இப்படி கூறுவதை கேட்ட கோபிக்கு ஆச்சர்யம் தாங்க வில்லை. உற்றுப்பார்த்தால் பெருமாளின் திருவடியில் நம்மாழ்வார் சிரித்த முகத்தோடு தோன்றி கோபியிடம் பேசினார்.

**நம்மாழ்வார் :** "பெருமாளின் திருவடியை எந்நேரமும் நினைப்போர்க்கு வைகுண்ட பிராப்தம் உண்டு" என்றார்.

**கோபி :** சிறிது மனம் தெளிந்து கண்ணன் திருவடியை எந் நேரமும் நினைத்து இருப்போரை எப்படி கண்டு பிடிப்பது?

**நம்மாழ்வார் :** "இதற்கு பதில் என்னுடைய சிஷ்யர் சுவாமி மதுரகவியாழ்வார் கூறுவார்" என்றார்.

**மதுரகவியாழ்வார் :** ஸ்ரீரங்கநாதரின் திருவடியை எந் நேரமும் சிந்தித்திருப்பவர் சுவாமி நம்மாழ்வார். அவரே சடகோபம் என்கின்ற ஸ்ரீசடாரி ஆவார். "கோயில்களுக்கு வரும் பக்தர்கள் யாரெல்லாம் ஸ்ரீசடாரி ஆசிர்வாதம் பெறுகின் றார்களோ, அவர்களுக்கெல்லாம் வைகுண்ட பிராப்தம் உண்டு" என்று திண்ணமாகக் கூறினார்.

பகவானுடைய தரிசனமும், ஆழ்வார்களின் ஆசிர்வாதமும் ஒரு சேர கிடைக்கப் பெற்ற பாலகன் கோபி மனத்தெளிவு பெற்றான். அதிகாலை சுறுசுறுப்பாக எழுந்து, "ஆழ்வார்கள் எம்பெருமானார் திருவடிகளே சரணம் என வணங்கி நின்றான். சர்வம் கிருஷ்ணார்பணம்"

கனக தாஸர், திருவேங்கடமுடையானின் அருளால் 1509 ஆம் ஆண்டு பீரப்ப நாயகருக்கும் பச்சம்மைக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் திம்மப்ப நாயகர்.

அனைத்து வித்தைகளும் கற்றறிந்த இவர், இளம் வயதிலேயே தன் தந்தையை இழந்தார். விஜய நகர ராஜாவின் உதவியால் தன் கிராமத்தை சீர்ப்படுத்தினார்.

ஒரு நாள், தன் நிலத்தை தோண்டும் போது, அவருக்கு ஒரு புதையல் கிடைக்க, அதை அனைத்தையும் அவர் ஏழை, எளிய மக்களுக்கு பகிர்ந்தளித்தார். ஆதலால் “கனக தாஸர்” (கனகம்–தங்கம்) என்ற பெயரையும் பெற்றார். மீதமிருந்த புதையலை வைத்து ககிநேவியில், ஸ்ரீஆதிகேசவ பெருமாளுக்கு ஒரு கோயிலை எழுப்பினார்.

கனக தாஸர், ஓர் சிறந்த இராணுவப் படை வீரராவார். தனது தாய் மற்றும் மனைவியை இழந்த பிறகு, தன் செல்வமனைத்தையும் ஸ்ரீஆதிகேசவருக்கு சமர்ப்பித்து விட்டார்.

ஒரு சமயம் அவர் விஜய நகர அரசின் சார்பாக போரிட நேர்ந்தது. அப்போது அவர் பயங்கரமாக தாக்கப்பட்டு வீழ்ந்த போது அவரை பகவானே தூக்க அவர் காயங்கள் அனைத்தும் மறைந்த தாம்.அனைத்தையும் துறந்து, ஒரு



# ஸ்ரீகனக தாஸர்



சிறந்த ஹரிதாஸராகி, பகவானை உணர்ந்து, தான் நினைக்கும் போதெல்லாம் பகவான் தனக்கு தரிசனம் தர வேண்டும் என்ற வரத்தையும் பெற்றார்.

இவர் வியாச தீர்த்தரின் சிஷ்யராவார். வியாச தீர்த்தருக்கு கனக தாஸரின் வரத்தைப் பற்றி தெரியவர, இவர் கனக தாஸரிடம் வேண்ட, அவர் பகவானிடம் கூற, கடவுள் நாய் வடிவத்தில் வர, பக்தர்கள் அவரை கற்களால் துரத்தினர். மீண்டும் கனக தாஸர் வேண்ட, பகவான் பாம்பு வடிவில் வர பக்தர்கள் பயந்தோடினர். ஆனால் வியாசராயரோ பகவானை வெள்ளி தட்டில் எடுத்து பாலபிஷேகம் செய்து வணங்கினார்.

ஒரு முறை பகவான் ஸ்ரீநிவாசரே கனவில் அழைக்க, அவர் திருமலை கோயிலுக்குச் சென்று, மெய்மறந்து பகவான் மீது பல திவ்ய பாடல்களை இயற்றினார்.

வேறொரு முறை, உடுப்பி ஸ்ரீகிருஷ்ணரின் தரிசனத்திற்குச் செல்ல, அது கிடைக்காததால் அக்கோயிலின் பின்புறம் சென்று ஏங்கி பாட, பின்புற சுவரில் ஒரு துவாரத்தின் வழியே, பகவான் ஸ்ரீகிருஷ்ணர் திரும்பி நின்று, அவருக்கு தரிசனமளித்தார். இன்றளவும் உடுப்பி கோயிலில் பக்தர்களுக்கு "கனகரின் கிண்டி" என்றழைக்கப்படும் துவாரம் வழியே பகவான் பக்தர்களுக்கு தரிசனம் அளிக்கிறார்.


மாபெரும் பக்தர், பாடலாசிரியர் மற்றும் பாடகராகிய இவர், மோஹன தரங்கிணி, பக்தி சாரா, நள சரித்திரம் என பல திவ்ய பாடல்களை இயற்றியுள்ளார்.


| | |
|---|---|
| **ஆங்கிலம் மூலம்** | **: திருமதி எ. கீதா வீரராகவன்** |
| **தமிழாக்கம்** | **: திருமதி பா. காயத்ரி, கேரளா.** |

# சித்திரக்கதை

## குமாரதாரை தீர்த்தம்


கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்
சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்


யாருமில்லையா? ஐயா! தாங்கள் யார்?
தாத்தா! இங்கு நம்மிருவரைத் தவிர வேறு யாருமில்லை!
4
என் மகனை தேடுகிறேன்! எனக்கு இப்போது துணை யார் இருக்கிறார்கள்?
திக்கற்றவர் களுக்கு அந்த தெய்வமே துணை
5
தாத்தா! வயது முதிர்ந்த தங்களுக்கு புத்திர மோகம் தேவையற்றது. முக்தியை வேண்டுவதே மேலானது
6
எனக்கு முக்தி வேண்டாம். எனது கோரிக்கையை தீர்ப்பாயா? நீர் ஸ்வாமியே என எண்ணுகிறேன்
7
தாத்தா! அனைவரும் முக்தியை வேண்டும் என விரும்புவார்கள். தாங்கள் மட்டும் முக்தி வேண்டாம் என்கிறீர்களே?
8
என் வாழ்வில் தெய்வ பித்ரு கார்யங்களை செய்யவில்லை. அவர்களுக்கான கடனை தீர்க்க தற்போது எனக்கு அவ்வாய்ப்பினை தாரும்!
9


அப்படியெனில் நான் சொல்வதை செய்யுங்கள் தாத்தா!
அப்படியே ஸ்வாமி!
அந்த வயதான பிராம்மணரை சிறிது தூரம் அழைத்துச் சென்றார். அங்கு நீரூற்று ஒன்று இருந்தது. அந்த நீரூற்றிற்கு ஸ்வாமி அம்முதியவரை அழைத்துச் சென்றார்
10
11
தாத்தா! இந்த நீரூற்றில் (தீர்த்தத்தில்) நீராடுங்கள்!
அவ்வாறே நீராடு கிறேன் ஸ்வாமி!
12
ஸ்வாமியின் ஆணைப்படி அந்த வயதான பிராம்மணர் நீரூற்றில் நீராடினார்
என்ன அற்புதம்! இங்கு நீராடியவுடன் நான் இளைஞனாக மாறி விட்டேனே!
13


அதுவரை அந்த வயதான பிராம்மணருடன் இருந்த இளைஞன் நவமோகன சுந்தரனான திருவேங்கடமுடையானாகக் காட்சி அளித்தார். அந்த பிராமணருக்கு அந்த அற்புதமான திவ்ய மங்கள தரிசன பாக்கியம் கிடைத்தது
14
தாத்தா! தாங்கள் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் செய்யுங்கள். உங்களுக்கு அருளை வழங்குகிறேன்!
மிக்க மகிழ்ச்சியடைந் தேன் ஸ்வாமி!
நூறு வயதான முதியவரை குமரனாக மாற்றிய இந்நீரூற்று இன்று முதல் குமாரதாரை தீர்த்தம் என்று போற்றப் படும்
தேவர்கள் அனைவரும் மலர்களைத் தூவினர்
15
அடுத்த இதழில் மற்றொரு திருவேங்கடமுடையானின் திருலீலையை பார்த்து படித்து மகிழ்வோம்!
முற்றும்.

நீதிக்கதைகள்

# கெடுவான் கேடு நினைப்பான்

*- திரு. சத்யதாரா, சென்னை.*

ஒரு கிராமத்தில் சகாதேவன் என்று ஒரு மூலிகை வியாபாரி இருந்தான். அவன் மிகவும் நேர்மையானவன். ஒரு நாள் மூலிகைகள் தேடும்போது, ஒரு புதரின் அடியில் ஒரு நேர்த்தி யான பட்டுப்பை கிடந்தது. அதை எடுத்து பிரித்து பார்க்க பை நிறைய... வெள்ளிக்காசுகள் யாரோ வழிப் போக்கன் இதை தவற விட்டு சென்று விட்டானே... அவன் எவ்வளவு கஷ்டப்படுவான்?... அவனை எப்படி கண்டு பிடிப்பது என்று மனம் பதைத்தான். அதை எடுத்துக்கொண்டு கிராமத்திற்குள் சென்றான்.

அந்த ஊர் எல்லையில் உள்ள ஒரு கோயிலில் கோயிலின் பூசாரி பக்தர்களிடம் ... அந்த ஊர் வியாபாரி சிங்காரம் தன்னு டைய வெள்ளிக் காசுகள் கண்டுபிடித்து தருபவர்களுக்கு தக்க சன்மானம் தருவதாகவும் கோயிலின் வாயிலில் அறிவிப்பு பலகை வைத்துள்ளதைக் கூறினான். சகாதேவன் அந்த வியா பாரியின் முகவரிக்கு சென்று காட்டினான். அதைக் கண்ட சிங்காரம் மனதில் மகிழ்ச்சி கொண்டான். பையில் வெள்ளிக் காசுகள் அப்படியே இருந்தன.

வஞ்சக குணம் கொண்ட சிங்காரம் இந்த காசுகளோடு ஒரு வைர மோதிரம் வைத்து இருந்தேன். அது எங்கே? கொடுத்து விடு என்று கெஞ்சினான்.

சகாதேவன் அவ்வாறு மோதிரம் எதுவும் இல்லை என்று சத்தியம் செய்தான். இறுதியாக வழக்கினை மரியாதை ராமனிடம் கொண்டு சென்றனர்.

மரியாதை ராமனோ இருவரையும் விசாரணை செய்தான். வியாபாரி சிங்காரத்தினிடம் உனது பட்டுப்பையில் வைர மோதிரம் இருந்தது உண்மைதானா என்று கேட்டு, ஆலயத்தின் முன் சத்தியம் செய்யச் சொன்னான். வியாபாரியோ மனசாட்சி இன்றி பொய் சத்தியம் செய்தான்.

பையில் வெள்ளிக் காசுகள் மட்டுமே இருந்தன. வைர மோதிரம் இல்லை என்ற சத்தியம் உணர்ந்தான் மரியாதை ராமன். பின்வருமாறு ஒரு தீர்ப்பை வழங்கினான்.

“வியாபாரி சிங்காரம் வெள்ளிக் காசுகள் கொண்ட பையில் வைரமோதிரம் இருந்தது என்று சத்தியம் செய்துள்ளான். ஆனால், இந்த பையினுள் வைர மோதிரம் இல்லை. கோயில் வாயிலில் உள்ள அறிவிப்பில் வெள்ளிக் காசுகளுடன் வைர மோதிரம் இருந்தது பற்றி குறிப்பிடப் படவில்லை. ஆகையால், இது சிங்காரத்தினுடைய பை இல்லை. வைரமோதிரம் மற்றும் வெள்ளிக் காசுகளுடன், பை கிடைத்தால், அதை வியாபாரி சிங்காரத்திடம் அளித்து விடலாம் என்றும், இந்த காசுகளில் இருந்து ஒரு சிறு பங்கு சகாதேவனுக்கு வழங்கப்பட்டு, மீதி காசுகள் ஆலயத்திற்கு காணிக்கையாக ஆக்கப்படும் என்றும் தீர்ப்பு வழங்கினான்”.

ஆதலினால் குழந்தைகளே! கெடுவான் கேடு நினைப்பான். நல்லதே நினைப்போம். நன்மையே செய்வோம். நலமாக வாழ்வோம்.



# சிறந்த சிறுமி

பெயர் :

அரவ சர்மிதா சிம்மா

பிறந்த தேதி :

17.01.2010

பள்ளியின் பெயர் :

சில்வர் ஓக்ஸ் பள்ளி

தந்தை பெயர் : திரு. எ. நரசிம்ம பாபு,
இளநிலை கணக்காளர், ஆ.மா.
மின்வாரியம், புத்தூர்.

தாயார் பெயர் : திருமதி எ. சீதாலக்ஷ்மி,
உதவி செயலாட்சித்தலைவர்,
விஷ்ணு நிவாசம், தி.தி.தே.

## சிறுமி சாதனைகள் :

- ஆரம்ப கல்வி வகுப்புகளில் முதன்மை மாணவி.
- தன் குருவான கேசவி பாதேதள்ளியிடம் (வாசவி கலா கேந்திரம்) பரத நாட்டிய நுட்பங்களை கற்றுக் கொண்டு பரதநாட்டியத்தில் சிறப்புத் திறன்.
- பரதநாட்டியத்தில் பங்கு கொண்டு மூன்று முறை 2018,2019 ஆம் வருடங்களில் ஐதராபாத், சென்னை, பெங்களுரு நாட்டிய நிகழ்ச்சிகளில் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றது.

## விருதுகள்...

- 2019 – "பாரதீய நாட்டிய களாபிநேத்ரி" ஸ்ரீலலித களான்ருத்ய நிதேதன் ராஜ மகேந்திர வரம்.
- 2019 – நாட்டிய சங்கல்ப விருது, ஸ்ரீகணபதி ந்ருத்யோத்ஸவம் காணபாகம்.
- 2019 – டைநமிக் டாலண்ட் விடுதி, திருப்பதி, 2020 நாட்டிய ஸ்ரீ விருது. சிகரம் ஆர்ட்டியேடர்ஸ், ஐதராபாத்.

புதிர்

# "வினா–விடை"

1. கிருஷ்ணர் அவதரித்த ஊர் எது?

அ) துவாரகை ஆ) மதுரா

இ) உடுப்பி ஈ) நைமிசாரண்யம்

2. கிருஷ்ணரின் வளர்ப்புத்தாய் யார்?

அ) யசோதை ஆ) கௌசல்யா

இ) குந்தி ஈ) கோசலை

3. கிருஷ்ணரின் குரு யார்?

அ) வசிஷ்டர் ஆ) விஸ்வாமித்ரர்

இ) சாந்தீபனி முனிவர் ஈ) வால்மீகி

4. கிருஷ்ணரின் சகோதரி யார்?

அ) ரேவதி ஆ) சுபத்ரா

இ) திரௌபதி ஈ) மண்டோதரி

5. கிருஷ்ணரின் சகோதரர் யார்?

அ) இலக்குமணர் ஆ) சிசுபாலன்

இ) பலராமர் ஈ) பரதன்

6) துவாரகையில் கிருஷ்ணரை சந்திக்க வந்த நண்பர் யார்?

அ) துரியோதனன் ஆ) குசேலர்

இ) ருக்மீ ஈ) கம்சன்

7) ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த நக்ஷத்ரம் என்ன?

அ) ரோகிணி ஆ) புணர்பூசம்


இ) ஸ்வாதி ஈ) திருவோணம்

– செல்வி எல். அனகா, திருவாரூர்.


1) ஆ, 2) அ, 3) இ, 4) ஆ, 5) இ, 6) ஆ, 7) அ

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



மேலே உள்ள படத்தை கீழே உள்ள கட்டத்தில் வரையுங்கள்...





பிரம்மோத்ஸவத்தில் சிறார்களின் நாட்டுபுறக்கலை நிகழ்ச்சி



பிரம்மோத்ஸவத்தில் சிறார்களின் கோலாட்டம்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 30-08-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742,
Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

